1992 ஏப்ரல் 28]

650—

பாடத் திட்டத்துடன் தொழிற்கல்விப் பயிற்சி அளித்தல்.

*1068—டாக்டர் வெ. புருஷோத்தமன்,

திரு. ச. புரட்சிமணி

டாக்டர் ஜெ. பரந்தாமன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆறாம் வகுப்பு முதல், பாடத் திட்டத்துடன் தொழிற்கல்விப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1 முதல் 8 வகுப்பு வரை பொதுவான பாடத் திட்டத்தோடு வாழ்க்கைக் கல்வி பாடத் திட்டமும், 9 மற்றும் 10 வகுப்புகளில் முன் தொழிற் கல்வி பாடத் திட்டமும், 11 மற்றும் 12 வகுப்புகளில் தனியாக தொழிற் கல்வி பாடத் திட்டமும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 9-45

டாக்டர் வெ. புருஷோத்தமன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. தமிழ்நாட்டிலே வெறும் அக்கடமிக் கல்வி பயின்று எந்தவித வேலைவாய்ப்பும் இன்றி இளைய சமுதாயம் திண்டாடிக்கொண்டிருப்பது அனைவரும் அறிந்தது. 6-ஆம் வகுப்பிலிருந்து தொழில் கல்வி தருகிற திட்டத்தை அமல்படுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்; சுயமாக வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கும்: மேலும் தொழில் கல்வியின் தரம் தலைசிறந்ததாக இருக்கும்: தலைசிறந்த தொழில் நுட்ப அறிஞர்களை பல துறைகளிலும் உருவாக்க முடியும். வருங்கால சந்ததியினர் எதிர்நோக்கி இருக்கின்ற சவால்களை ஈடுகட்டக்கூடிய வகையில் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக இருக்கின்ற, இந்தியாவிலேயே நாம் ஒரு முன்மாதிரி மாநிலமாகத் திகழ வேண்டும் என்று பாடுபட்டுவரும் தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே எதிர்காலத்தில் இக்கொள்கையைப் பரிசீலித்து குறைந்தபட்சம் தாலுக்காவுக்கு ஒரு தொழில் கல்வி பள்ளியையாவது அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோல் குறைந்தபட்சம் தொழில் கல்வி சம்பந்தமாக ஒரு பாடத் திட்டத்தை ஏற்படுத்தி 6-ஆம் வகுப்பிலிருந்து தொழில் கல்வியைப் புகுத்த அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இனிமேல் பரிசீலிக்க வேண்டிய ஒன்றல்ல. ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தான் நான் பதிலாக இங்கே கூறி இருக்கிறேன். அது பல் வேறிடங்களில் வெற்றிகரமாகச் செயல்படாமல் இருக்கலாம். அதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் இப்படி தொழில் கல்விக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று கேள்வி கேட்கக் கூடிய நிலைமைகள் உருவாகி இருக்கக்கூடும். தலைமையாசிரியர் பொறுப்பில் இருக்கின்ற ஆசிரியப் பெரு மக்கள் இதில் தனி ஆர்வம் எடுத்துக்கொண்டு, தொழில் கல்வியை மாணவர்களுக்குப் போதிக்கிற இந்த விஷயத்தில் அவர்கள் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு செயல்படு வார்களேயானால் இந்தக் குறை நீங்கும். அரசைப் பொறுத்த மட்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னென்ன காரணங் களை எல்லாம் சொன்னாரோ அந்தக் காரணங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டுதான் ஏற்கனவே இதை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகள், தொழில் கல்விக்கூடங்கள் இல்லாத இடங்களில், தொகுதிகளில் கிராமப்புறங்களின் தேவையான நவீன முறை விவசாயம், காய்கறி உற்பத்தி, விவசாயக் கருவிகள் உற்பத்தி, தையல், பூத்தையல், தச்சு வேலை, நெசவு, வெல்டிங் போன்ற பயிற்சிகளை அளிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க நிலையில் இருக் கின்ற பள்ளிகளில், உயர்நிலைப்பள்ளிகளில், மேல்நிலைப்பள்ளி களில் தொழிற்கல்வி எப்படி நடத்தப்படுகிறது என்பதைத்தான் இங்கே பதிலில் குறிப்பிட்டிருந்தேன். அது தவிர பயிற்சித் துறையின் சார்பாக தொழில் பயிற்சி நிலையங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு, நடைபெற்று வருகின்றன. புதிதாக ஆரம் பித்து நடத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாலி டெக்னிக்குகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. இன்ஜினியரிங் கல்லூரிகள் நிறைய ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் பட்டு வருகின்றன. வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க வும், நம்முடைய பொருளாதார நிலையை உயர்த்தவும், வீணாகிக் கொண்டிருக்கக்கூடிய மனித சக்தியைப் பண்படுத்து கிற ஒரு முயற்சியாக கீழ்நிலையிலிருந்து மேல்நிலை வரைக்கும் தரப்படுகிற தொழில் கல்வியை இந்த அரசு நினைக்கிறது: ஏற்றுக்கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

1992 எப்ரல் 28]

டாக்டர் அ. ஸ்ரீதரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தொடக்கப் பள்ளி முதல் பள்ளி இறுதி வரை தொழில் கல்வி பயில வேண்டுமென்று ஒரு நிலை இங்கிலாந்து நாட்டிலே இருப்பதைப் போல, அதாவது 'த்ரீ டையர் சிஸ்டம்' போல தொழில் கல்வியையும் சேர்த்து பள்ளிகளில் பயில்வதற்கு அரசாங்கம் புதிய முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தமட்டில் முயற்சி எடுப்பதில் எந்தக் குறையையும் நாங்கள் வைக்கவில்லை. அதற்கேற்ற ஒரு ஒத்துழைப்புதான் ஆசிரியப் பெருமக்களிடத்தி லிருந்தும், பொதுமக்களிடத்திலிருந்தும் நாம் எதிர்பார்க் கிறோம். பொதுவாக ஒன்றாவது வகுப்பில் சேர்க்கிறபோது பெரும்பாலான பெற்றோர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் தங்களுடைய மகன் இன்ஜினியராக, அல்லது டாக்டராக வரவேண்டுமென்றுதான் நினைக்கிறார்களே தவிர, அப்படி வர முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது ஏதாவது ஒரு தொழில் கல்வி கற்றுக்கொண்டு வாழ்க்கையில் சுதந்திரமாக வாழ்கிற சக்தியை அவர்கள் பெறவேண்டும் என்று பெற்றோர்கள் நினைப்பதில்லை. அவர்கள் ஒரு இறுதி நோக்கத்தை வைத்துக் கொண்டு, அதற்கு உரிய தகுதி தன்னுடைய குழந்தைக்கு இருக் கிறதா, இல்லையா என்பதைப்பற்றிக் கூட கவலைப் படாமல் அந்தப் படிப்பினை அந்தக் குழந்தைக்குத் தர முயற்சிக்கிறார்கள். அதன் காரணமாக 7-வதிலே நிற்கின்ற வர்கள், 8-வதிலே நிற்கின்றவர்கள, 10-வதோடு நின்று விடுகின்றவர்கள, 12 வதோடு நின்று விடுகின்றவர்கள் என்ற அளவிற்கு 'டிராப் அவுட்ஸ்' எண்ணிக்கை அதிகமாக இருந்து வருகிறது.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண். 651, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

651—

இந்திய மருத்துவச் சங்கத்தின் மூலம் மருத்துவக் கல்லூரி ஆரம்பித்தல்

*3369— டாக்டர் எஸ். சுந்தரராஜ்;
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இந்திய மருத்துவச் சங்கத்தின் மூலம் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க அரசுக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளதா?

(ஆ) அரசு அதன் மீது எடுத்துள்ள முடிவு என்ன?

WH ALONE TRIUMPHS